1979 மார்ச் 7]

கோத்தகிரி சோலூர் மட்டம் சாலை

*வினா எண் 271—திரு. க. அரங்கசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குன்னூர் தொகுதி கோத்தகிரியிலிருந்து சோலூர் மட்டம் வரை செல்லும் சாலையை நெடுஞ்சாலை கிராமப் பணித் துறையினர் ஏற்று சீர்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : இச்சாலை ஏற்கனவே அரசினால் மேற்கொள்ளப்பட்டு நெடுஞ்சாலை கிராமப்பணித் துறையினால் பராமரிக்கப்பட்டு வருகின்றது. இச்சாலையின் மேம்பாட்டு பணிகளை மாநில சாலைத் திட்டத்தின்கீழ் பின்வரும் திட்டக் காலங்களில் வேலைகளின் பட்டியலில் நிதியினம் வேலையின் முக்கியத்துவம் ஆகியவைகளை அனுசரித்து சேர்க்க பரிசீலனை செய்யவேண்டும். இதுவரை இச்சாலை மேம்பாட்டு வேலைகள் பராமரிப்பு நிதியிலிருந்து நிதி நிலைக்கு ஏற்ப எடுத்து செய்யப்படும்.

ஊராட்சிகளில் விவசாயிகளுக்குப் பரிசுத் திட்டம்

*வினா எண் 272—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு ஊராட்சியிலும் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஒவ்வொரு ஊராட்சியிலும் அதிகமாக உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு பரிசுகள் வழங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது இல்லை.

திரு. ம.ா. மணிமாறன் : விவசாயிகள் பல தொல்லைகளை அனுபவித்து வருகிறார்கள். ஒழுங்காக சாகுபடி செய்ய ஊக்குவிக்கும் பொருட்டு முன்னால் கொடுக்கப்பட்ட திட்டந்தான் தற்போது தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மறு பரிசீலனை செய்து அதிக உற்பத்தி செய்கிறவர்களுக்கு பரிசு கொடுக்க அரசு முன்வருமா ?

[1979 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தத் திட்டம் இருந்து அதன் மூலமாக 'வேளாண்மைச் செம்மல்' என்கிற பட்டத்தைக் கொடுத்து வந்தார்கள். ஆனால் கடந்த ஆட்சியின்போது 1975 ஆம் ஆண்டிலே அந்தத் திட்டம் வேண்டியதில்லை என்று நிறுத்தப் பட்டிருக்கிறது. ஆனாலும் இந்த ஆட்சியைப் பொறுத்தவரையில் வருகின்ற இந்த ஆண்டிலேயிருந்து மாவட்டந்தோறும் மாநில அளவிலும் அந்தப் பட்டங்களைக் கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

திரு. இ. தமிழரசன் : தலைவர் அவர்களே, 1975 ஆம் ஆண்டிலே கடந்த ஆட்சியின்போது இந்தத் திட்டம் நிறுத்தப் பட்டு விட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். மீண்டும் அந்தத் திட்டத்தை அமல்படுத்தும் நோக்கத்தில் விவசாயிகளை ஊக்குவிக்கும்பொருட்டு மாவட்டந்தோறும் அதை அமல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், மாவட்டந் தோறும், மாநில அளவிலும் அது கொடுக்கப்படும்.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் மைய அரசின் உதவியுடன் நடந்துவந்த திட்டம். மைய அரசு உதவியை நிறுத்திவிட்ட காரணத்தினால் மாநில அரசு அந்தத் திட்டத்தை நிறுத்த வேண்டிய நிலைமை ஏற்பட்டது. ஆகவே, அந்தத் திட்டத்தை மறு பரிசிலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, மைய அரசைப் பொறுத்தவரையில் அகில இந்திய உயர் விளைச்சல் பரிசுப்போட்டி என்று தனியாக இருக்கிறது. அந்தத் திட்டம் இன்னும் நடைமுறையில் இருந்து வருகிறது. 'கிருஷி பண்டிட்' என்ற பட்டத்தை அவர்கள் கொடுக்கிறார்கள். முதல் பரிசு 5 ஆயிரம் ரூபாயும், இரண்டாவது பரிசாக 3 ஆயிரம் ரூபாயும், 3 வது பரிசாக 2 ஆயிரம் ரூபாயும் அவர்கள் கொடுத்து வருகிறார்கள்.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, விவசாய டிபார்ட்மெண்ட்டால் 'வயல் விழா' என்று நடத்தப்பெறுகிறதே. 'வயல் விழா' என்றால் என்ன என்று கூறமுடியுமா ?

1979 மார்ச் 7]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, வானொலியின் மூலமாக 'வயலும் வாழ்வும்' என்ற நிகழ்ச்சிகள் நடந்து வருகின்றன. 'பண்ணை இல்ல நிகழ்ச்சிகளும்' நடந்துவந்து கொண்டிருக்கின்றன. 'வீடும்வயலும்' நிகழ்ச்சிகளும் நடந்து வருகின்றன. அதைப் போலவே 'வயல் விழா' என்ற விழா, வயலில் காலை முதல் மாலை வரையில் உழைக்கின்ற பாட்டாளிகளுடைய விவசாயிகளுடைய உழைப்பை பற்றிய நிகழ்ச்சிகள் அவர்கள் உதிரத்தைச் சிந்தி பாடுபடுகின்ற நிகழ்ச்சிகள் பற்றியெல்லாம் விளக்கப்படுகிறது. உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு நடைபெறுகின்ற நல்ல விழா தான் 'வயல் விழா' என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கொ. சின்னசாமி : சிறந்த விவசாயிகளுக்கு மாவட்ட அளவிலே பரிசுகள் கொடுக்கப் போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். மாவட்ட அளவிலே என்னும்போது சாதாரண சிறிய விவசாயிகள் பங்கு கொள்வது என்பது கடினமான காரியமாகும். ஆகவே ஊராட்சி என்ற அளவில் இல்லாவிட்டாலும், ஊராட்சி ஒன்றிய அளவிலாவது அத்தகைய பரிசுகளைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னேன். முதலிலே மாநில அளவிலே கொடுக்க முன் வந்தது, அதை மாவட்ட அளவிலேயும் நாம் கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகளிலே ஈடுபட்டிருக்கிறோம்.

திரு. ரா. மார்க்கபந்து : தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற விலை வீழ்ச்சிகள் காரணமாக வயல்களிலே பாடுபடுகின்ற விவசாயிகள் விவசாயத் தொழிலை விட்டு விட்டு வேறு தொழிலுக்குப் போகலாமா என்று பார்த்துக் கொண்டிருக்கிற நிலைமை தமிழக அரசுக்குத் தெரியுமா ? அகில இந்திய அளவிலே விவசாயிகளுடைய திட்டம் என்ற முறையிலே அறிவித்திருக்கிறார்கள், அதிலே கோதுமைக்கு மட்டும் அதிகமான விலையைக் கொடுத்துவிட்டு, நெல்லுக்குக் குறைந்த விலையைத்தான் கொடுக்கிறார்கள், கோதுமைக்குக் கொடுப்பதைப்போல நெல்லுக்கும் அதிகமான விலையைக் கொடுக்க வேண்டுமென்று அறிவிக்கின்ற வகையிலே அந்த விழாவிலே தமிழக அரசு கலந்து கொள்ளாது, கோதுமைக்குக் கொடுக்கப்படுவது போன்ற விலை நெல்லுக்குக் கொடுக்கப்படாத வரையில் கலந்து கொள்ளாது என்ற மறுப்பை அறிவிப்பைச் செய்ய, எதிர்ப்பைத் தெரிவிக்கின்ற திட்டம் இந்த அரசுக்கு உண்டா ?

[1979 மார்ச் 7

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, விவசாயப் பெருங்குடி மக்களின் விளைச்சலுக்குத் தகுந்த விலை யில்லை என்ற நிலைமை தமிழகத்திலே மட்டுமல்ல, அகில இந்தியாவிலேயும் உள்ள 23 மாநிலங்களிலேயும் இருந்து வருகிற பிரச்சினை என்பது எல்லோருக்கும் தெரியும். விலை கிடைக் காத அச்சம் இருக்கிற காரணத்தாலேயே வேளாண்மைத் தொழிலை விட்டு வேளாண்பெருமக்கள் வேறு தொழிலுக்குச் சென்று விட மாட்டார்கள். அந்த அச்சத்தைப் போக்குகின்ற அளவிற்கு அரசு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. விளைபொருட்களுக்கு விலை நிர்ணயம் செய்வது, ஏ.பி.சி. என்று சொல்லப் படுகிற, அக்ரிகல்சுரல் பிரைஸ் கமிஷன் மூல மாக நடந்து வருகிறது. அதற்கு நாம் கோரிக்கைகளை பல நேரங்களிலே வைத்து வலியுறுத்தியிருக்கிறோம். தமிழக முத லமைச்சர் அவர்கள் தென்னக முதலமைச்சர்களின் மாநாட்டைக் கூட்டி வேளாண்மை விளை பொருட்களுக்கு நியாயமான விலையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள்.

[முற்பகல் 9-50]

நம்முடைய கோரிக்கைகள் இன்னும் நிராகரிக்கப்படவில்லை. அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்களா இல்லையா என்பது தெரிந்து விட்ட பிறகு, அதற்குப் பின்னர்தான் அவர்கள் நடத்தக் கூடிய விழாக்களில் கலந்து கொள்ள வேண்டுமா? வேண்டாமா என்பதைப்பற்றி முடிவெடுக்க வேண்டும்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, 'வயல் விழா' என்பதைப் பற்றி எனக்கு ஒரு குறிப்பு கொடுக்கப்பட் டிருக்கிறது. விளைந்த இடங்களைக் கூட்டிக் கொண்டு சென்று காட்டுவது என்று. இப்படிக் கூட்டிக் கொண்டு சென்று காட்டு வதாகக் கணக்கெழுதி, யாரைக் கூட்டிச் சென்று காட்டுகிறார் களோ தெரியாது. அப்படிக் கணக்கெழுதுகின்ற மஸ்டர்ரோல் அம்சமும் இதில் அடங்கியிருக்கிறது. இதை அரசாங்கம் பரி சீலித்து நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவ ரவர்களே, 'வயல் விழா' விலே இப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்வதைப் போல் நடப்ப தில்லை. 'வயல் விளக்க விழா' என்று சொல்லி, அந்த விழாக்கள் நடைபெறுகின்றன. Demonstration Plots என்று சொல்லி 'செயல் விளக்கப் பாத்திகள்' என்று ஏற்பாடு செய்து, நடை முறைகளை விவசாயப் பெருங்குடி மக்கள் விஞ்ஞான ரீதியிலே எப்படியெல்லாம் கருவிகளைப் பயன்படுத்துவது விஞ்ஞான ரீதியிலே எப்படி உரமிடுவது, எப்படிப் பூச்சி மருந்து அடிப்பது என்பது போன்ற விளக்க உண்மைகளை அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்ற எண்ணத்தில் அது போன்ற விழாக்கள் நடை பெறுகின்றன.

1979 மார்ச் 7]

திரு. கூத்தகுடி ச. சண்முகம் : தலைவரவர்களே, திடீர் ஆய்வு, வயல் விழா, எலி ஒழிப்பு என்றெல்லாம் சொல்லி வயலுக்குக் கூட்டிக் கொண்டு சென்று காட்டுவது என்று இருக்கிறது, அதைத் தயவு செய்து பரிசீலனை செய்ய வேண்டும் என்பதற்காகத்தான் சொல்கிறேன். அதற்கு வேறு விளக்கம் சொன்னால் அமைச்சரவர்கள் தான் சொல்ல வேண்டும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, விவசாயத் துறையிலே தமிழ் நாட்டிலே மிகுந்த அளவிற்கு முன்னேற்றம் ஏற்பட்டிருப்பது உண்மை. எத்தனை ஆராய்ச்சிகள் செய்தாலும், பூச்சி தாக்குதல் பற்றிச் சொன்னாலும், எத்தனை செயல் விளக்கப் பாத்திகள் வைத்தாலும், எது செய்தாலும் இன்னும் பூச்சி தாக்குதலைத் தடுக்கவும், உரமிடுவதிலும் இன்னும் ஆராய்ச்சிகள் போதாது. இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தில் விவசாயம் படுமோசமாக ஆகிவிட்டது. விவசாயத் துறை சொன்ன மருந்துகளை அடித்தும், உரம் போட்டும் எல்லாம் சாவியாகி விட்டது. இந்த மாதிரி நிலைமை ஏற்படாமல் தடுக்கவும், பருவ நிலைக் கோளாறுகளினால் பாதிக்கப்படாமல் இருக்கவும், பூச்சிகளை கட்டுப் படுத்தவும் ஆராய்ச்சிகள் விரிவுபடுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, ஆராய்ச்சிகள் விரிவு படுத்தப்பட்டு வருகின்றன. வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் மூலமாகவும், விவசாய இலாக்கா மூலமாகவும், பூச்சிகளினால் ஏற்படும் தொல்லைகளைக் குறைக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு இன்றளவும் விரிவாக்கப் பணிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, விவசாயிகளுக்கு இப்பொழுதிருக்கின்ற முக்கியமான பிரச்சினை ஏற்கனவே மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற குவிண்டாலுக்கு 80 ரூபாய் என்பது குறைவாக இருக்கிறது, இருந்தாலும் குறைந்த விலைக்கே வாங்க ஆள் இல்லை என்ற பிரச்சினைதான் முக்கியமாக இருக்கிறது. ஆகவே, மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கே இந்த மாநில அரசு விவசாயிகளிடம் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, நெல்லைக் கொள்முதல் செய்ய வேண்டியது சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், ஃபுட் டிபார்ட்மெண்ட், இவைகள் தான் கொள்முதல் செய்ய வேண்டும். மேலும் நெல்லுக்கு மத்திய அரசு நிர்ணயித்த விலை 80 ரூபாய் என்று மாண்புமிகு

உறுப்பினர்கள் சொன்னார்கள். 80 ரூபாய் அல்ல, 85 ரூபாய் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். ஆகவே, அதைப் பொறுத்து இந்த அரசு தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : தலைவரவர்களே, விவசாயப் பண்ணைகளில் அதிகாரிகள் ஒட்டு விதைகளைப் புதிது புதிதாகக் கண்டுபிடிப்பதைப் போல தனியார் பண்ணைகளில் தனியார் புதிய விதைகளைக் கண்டு பிடிக்கிறார்கள். அவர்களையும் அரசு ஊக்குவிக்கும் அளவிற்கு ஊக்க போனஸ் அல்லது பட்டங்களைக் கொடுக்குமா ? விவசாய அதிகாரிகள் புதிய நோய்களுக்குப் புதிய மருந்துகளைக் கண்டு பிடிப்பதைப் போல தனியார் பண்ணைகளிலும் புதிய நோய்களுக்குப் புதிய மருந்துகளைக் கண்டுபிடிக்கிறார்கள். அதற்கு அந்த விவசாயிகளை ஊக்குவிக்க ஏதாவது போனஸ் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவரவர்களே, அவர்களுக்குப் போனஸ் கொடுக்கும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. ஆனால் அவர்களை ஊக்குவிக்கும் அளவில் உதவிகள் செய்கின்ற நல்லெண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, இந்த விலை நிர்ணயம் செய்யும் விஷயதத்தில் மத்திய மாநில அரசுகள் செய்வதைவிட, உற்பத்தி செய்கின்ற விவசாயிகளே ஒரு குழுவை அமைத்து, அதிலே நுகர்வோர்களுக்கும் இடம் அளித்து, அவர்களே இந்த விலை நிர்ணயம் செய்யும் விஷயத்தில் முழு உரிமை பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க இந்த அரசு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்ய நடவடிக்கை எடுக்குமா ? அதே நேரத்தில் மத்திய அரசாலே கிருஷி பண்டிட் கொடுக்கப்படுகிறது என்று சொன்னார்கள். அது என்ன ரிஷியும், பண்டிட்டும் சேர்ந்ததா ? அது என்னவென்று தெரியவில்லை, பெரிய மர்மமாக இருக்கிறது. அதற்குத் தமிழிலே என்ன சொல்வது என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இப்படிப்பட்ட வார்த்தைகளைக் கொடுத்தால், தமிழக அரசு ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்று சொல்ல அரசு முன் வருமா ? அந்த வார்த்தைகளைத் தமிழிலே சொல்ல நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: தலைவரவர்களே, 'கிர்ஷி பண்டிட்' என்ற பட்டத்தை மைய அரசு கொடுத்து வருகிறது. இது வரையிலும் இந்த அரசு பொறுப்பேற்ற பின்னாலே அந்தப் போட்டியில் நாம் கலந்து கொள்ளவில்லை. பட்டம் வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டால் வாங்குவதா, வேண்டாமா அல்லது 'கிர்ஷி பண்டிட்' என்ற வார்த்தைகளை

1979 மார்ச் 7]

மாற்றி, தமிழிலே போட வேண்டுமென்ற எண்ணத்தையெல்லாம் அப்பொழுது முன்வைக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேள்வியின் முதல் பகுதியில், விலை நிர்ணயத்தைப் பற்றி கேட்டார்கள். விவசாயப் பெருங்குடி மக்கள் ஒன்றாகக் கூடி அந்த விலையை நிர்ணயிக்க மைய அரசிடத்திலே ஆலோசனை பெற்று செய்யலாமா என்று கேட்டார்கள். அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

பாபநாசம் அணையிலிருந்து தண்ணீர்.

*வினா எண் 273—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்க்க வேண்டி அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பெற்ற நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவரவர்களே, பாபநாசம் அணைத் தண்ணீரை சேர்வலாறு சங்கம இடமான முண்டந்துரையிலிருந்து கால்வாய் மூலம் மணிமுத்தாறு அணையில் சேர்த்தால், அநேக ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்று தெரிகிறது. ஆகவே, அரசு அதை மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலனையில் உள்ளது.

களியாம்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையம்.

*வினா எண். 274—திரு. பாக்கூர் சு. சுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் தொகுதியைச் சார்ந்த களியாம்பூண்டி கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?